*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 165/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.தனபால் த/பெ. ராமசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.11.2025.**

துவக்க நேரம் 04.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஈச்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி பரமசிவம், எனது தம்பி ஆவார். நான் கடந்த 14.02.2021 ந் தேதியில் எனது காட்டில் காலை 11.00 மணியளிவல் எனது தோட்டத்திற்கு தண்ணீர் எடுத்துவிட சென்றபொழுது, எதிரி பரமசிவம் வரப்பில் புல் புடுங்கிக்கொண்டிருந்தார். அவரது மனைவி வரப்பில் இருந்த செடியை வெட்டிக்கொண்டிருந்தார்.

2) நான் தண்ணீர் எடுத்துவிட சென்றபொழுது பரமசிவம் என்னிடம் வந்து எனக்கும் காட்டில் பங்கு இருக்கிறது என்றும், நீ தண்ணீர் எடுத்துவிடக்கூடாது என்றும் சொல்லி என்னிடம் தகராறு செய்தார். நான், உடனே இது சம்மந்தமாக தொலைபேசியில் எனது மனைவிக்கு அழைத்து, பரமசிவம் என்னிடம் தகராறு செய்கிறார் உடனே வாருங்கள் என்று கூப்பிட்டேன்.

3) எனது மனைவி வருவதற்குள், எதிரி பரமசிவம் அவரது மனைவி கையிலிருந்த கொடுவாளை பிடுங்கி வந்து எனது வலதுபக்க மண்டையில் வெட்டிவிட்டார். மேலும் எனது இடதுகை மோதிரவிரலை பிடித்து, பரமசிவம் முறுக்கியதில், எனக்கு வீக்கக்காயம் ஏற்பட்டது.

4) பின்பு அங்கே வந்த எனது மனைவி இந்தராணியும், எனது மகள் மாதேஸ்வரியும் பரமசிவத்தின் கையில் இருந்த கொடுவாளை பிடுங்கிவிட்டார்கள். பின்பு எதிரி பரமசிவம், ஒரு உருட்டுக்குச்சியால் எனது மகளின் இடதுகையில் அடித்துவிட்டார்.

5) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எனது பக்கத்து காட்டுக்காரர் என்னை அழைத்துவந்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, மல்லியகரை காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கமாக எத்தனை மணிக்கு காட்டிற்கு செல்வோம் என்றால் காட்டில்தான் நாங்கள் குடியிருக்கிறோம். எங்களது பூர்வீக சொத்தை, நாங்கள் இன்னும் பிரித்து கிரயம் செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான், எங்களது பெற்றோர் வாய்மொழியாக அவரவர்களுக்கு பிரித்துவிட்டதின் பேரில் தற்பொழுது குடும்ப சொத்தை அனுபவித்து வருகிறோம்.

2) சம்பவம் நடந்ததாக சொல்லும் அன்று என் தம்பி, என்னை எத்தனை மணிக்கு தாக்கினார் என்றால் காலை 11.00 மணியளவில் தாக்கினார். என் தம்பி, என்னை கொடுவாளால் வெட்டியதாக நான் சொல்லும் நிலையில், எத்தனை தையல் எனக்கு போடப்பட்டது என்றால் 8 தையல்கள் போடப்பட்டது. எனது முதல் விசாரணையில் எனக்கு தையல் போட்டதாக நான் சொல்லவில்லை என்றும், தற்பொழுது வழக்கிற்காக எனது காயத்திற்கு தையல் போட்டதாக

பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தம்பி பரமசிவத்தை தவிர, மற்ற நாங்கள் உடன்பிறந்தர்கள் அனைவரும் நன்றாக பேசிக்கொள்வோம் என்றால் எனது தம்பி பேசுவாரா, இல்லையா என்பது எனக்கு தெரியாது, ஆனால் எனது சகோதரிகளுடன் பேசுவேன்.

3) என்னை, யார் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் எனது பக்கத்து காட்டை சேர்ந்த சரவணன் என்பவர் சேர்த்தார். எனது முதல் விசாரணையிலும், புகாரிலும் மாதேஸ்வரி, என்னை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும் சொல்லிவிட்டு, தற்பொழுது சரவணன் என்பவர், என்னை அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக முன்னுக்கு பின் முரணாக மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, எனது மகள் மாதேஸ்வரிக்கும் அடிபட்டு அவரும் அரசு மருத்துமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்.

4) எனது சகோதரிகள், என்னிடம் மட்டும்தான் பேசுவார்கள் என்றும், எனது தம்பி பரமசிவத்திடம் பேசமாட்டார்களா என்றால் என்னிடம் பேசுவார்கள், எனது தம்பியிடம் பேசுவார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. எங்களுக்கு மொத்தமாக சுமாராக எவ்வளவு நிலம் என்றால் 15 ஏக்கர் நிலம் உள்ளது. எத்தனை கிணறு மொத்தமாக உள்ளது என்றால் இரண்டு கிணறுகள் உள்ளது, அதில் ஒரு கிணறு எனது அண்ணன் சிவலிங்கத்திற்கும், மற்றொரு கிணற்றை எங்கள் இருவருக்கும் வாய்மொழியாக பிரித்துகொடுத்தார்கள்.

5) ஆத்தூர், அரசு மருத்துவமனையில் போலிசார், என்னை விசாரித்து கையெழுத்து போடச்சொன்னதால் நான் போட்டேனா என்றால் இல்லை, நான் சொன்ன சம்பவங்களை எழுதிக்கொண்டார்கள், நான் அதை முழுவதுமாக படித்துப்பார்த்து கையெழுத்து போட்டேன். இந்த சம்பவம் நடந்தபொழுது அக்கம் பக்கம் இருந்த 10, 20 நபர்கள் கூட்டமாக வேடிக்கை பார்த்தார்களா என்றால் இல்லை, சரவணன் மட்டும்தான் இருந்தார். எங்களுக்குள் அடிக்கடி தகராறு நடந்ததால், எனது தம்பி பரமசிவம் அவரது அரசு வேலை வேண்டாம் என்று விட்டுவிட்டு வந்துவிட்டாரா என்றால் இல்லை.

6) இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எதிரி, எனக்கெதிராக கொடுத்த புகாரின் பேரில் என் மீது வழக்கு பதியப்பட்டு, நிலுவையில் உள்ளதா என்றால் ஆமாம். நான் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எனக்கு வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு, எதிரி, என்னை அடித்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது தம்பிக்கெதிராக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், அவருக்கு எதிராக நான் பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.36 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.19 17:40:13 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 165/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.ராஜ்குமார் த/பெ. தனபால்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.11.2025.**

துவக்க நேரம் 04.37 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஈச்சம்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தனபால், என் அப்பா ஆவார். ஆஜர் எதிரி பரமசிவம், எனது சித்தப்பா ஆவார். கடந்த 14.02.2021ந் தேதியில் என் அப்பா காட்டில் காலை 11.00 மணியளவில் எங்களது தோட்டத்திற்கு தண்ணீர் எடுத்துவிட சென்றபொழுது, எதிரி பரமசிவமும், எனது அப்பாவும் சத்தம் போட்டுக்கொண்டார்கள்.

2) நாங்கள், சத்தம் கேட்டு சண்டையை விலக்கிட சென்றபொழுது, எனது அக்கா மாதேஸ்வரியை, பரமசிவம் கட்டையால் அவரது இடதுபக்க முழங்கைக்கு கீழே அடித்துவிட்டார். அவ்வாறு அடித்ததில் எனது அக்காவிற்கு ஆள்காட்டி விரல், நடுவிரலில் காயம் ஏற்பட்டுவிட்டது. மேலும் பரமசிவம் கொடுவாளால், எனது அப்பாவின் நடுமண்டையில் வெட்டிவிட்டார்.

3) அதன்பின் எங்களது பக்கத்து காட்டுக்காரரான சரவணன் என்பவர் வந்தபிறகு சரவணனும், நானும் அடிபட்ட எனது அப்பாவையும், அக்காவையும் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன வேலைக்கு செல்கிறேன் என்றால் விவசாய வேலைக்கு செல்கிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கும், நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் என்றால் 300 அடி துாரம் இருக்கும். நான், எனது பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக வசிக்கிறேனா என்றால் இல்லை, தனியாக அருகருகே வசிக்கிறோம். எனக்கு திருமணமாகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது.

2) சொத்து சம்மந்தமாக தகராறு நடந்து, எங்களுக்கெதிராகவும், எதிரிக்கெதிராகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது அப்பாவும் காட்டுவேலைக்கு செல்லும்பொழுது மண்வெட்டி, கொடுவாள் எடுத்துச்செல்வார் என்றும், எதிரியும் மேற்படி ஆயுதங்களை எடுத்துச்செல்வார் என்றும், இருவருமே அடித்துக்கொண்டதால் யார் யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, எனது அப்பா ஆயுதங்கள் எதையும் எடுத்துச்செல்லவில்லை.

3) எங்களது பூர்வீக சொத்து சம்மந்தமாக எங்கள் இருகுடும்பத்திற்கும் இடையே சொத்து தகராறு காரணமாக முன்விரோதம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி முன்விரோதத்தின் காரணமாக, எனது அப்பாவிற்கு வேறு விதத்தில் ஏற்பட்ட காயத்தை வைத்து, எனது அப்பா எனது சித்தப்பாவிற்கு எதிராக கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) போலிசார் சம்பவத்தன்றே வந்தார்களா அல்லது மூன்று நாட்கள் கழித்து வந்தார்களா என்றால் சம்பவம் நடந்த அன்றே மாலை நேரத்தில் வந்து விசாரித்தார்கள். எனது அப்பாவை சிகிச்சைக்கு யார் சேர்த்தார்கள் என்றால் சரவணனும், நாங்களும் சிகிச்சைக்கு சேர்த்தோம்.

5) நான் கையெழுத்து தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றும், போலிசார் கையெழுத்து போடச்சொன்னதால் போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல, படித்துபார்த்துதான் கையெழுத்து போட்டேன். காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேனா, காட்டில் கையெழுத்து போட்டேனா என்றால் காட்டில்தான் கையெழுத்து போட்டேன்.

6) நான் சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், இவ்வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், எனது அப்பாவிற்கு ஆதரவாக, எதிரிக்கெதிராக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.52 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.19 17:40:26 +0530

Judicial Magistrate No.2, Attur.